**MCOP**. 169 /2021

PW-1 அம்சரத்தினம்

Date:- 24.09.2024

ம.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டார்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தால் எனக்கு ஏற்பட்டிருந்த எலும்பு முறிவு காயங்கள் குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. எலும்பு முறிவு கூடவில்லை. விபத்து சமயத்தில் நான் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து போனேன். அதன் எண் எனக்கு நினைவில்லை. அந்த இருசக்கர வாகனத்தில் விபத்து சமயத்தில் நாங்கள் 3 நபர்கள் பயணம் செய்தோம் என்றால் நான் எனது கணவர், என்னுடைய கைக்குழந்தை ஆகிய 3 பேரும் தான் பயணம் செய்தோம். விபத்தில் எனக்கு மட்டும் தான் காயம்பட்டது. எனது கணவருக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் என் கணவரிடம் இருக்கிறது. விபத்து குறித்து நான் புகார் கொடுக்கவில்லை. எனது வயது, தொழில், வருமானம் ஆகியவற்றை நிரூபணம் செய்ய ஆவணங்கள் தாக்கல் செய்ய வில்லை என்றால் சரியல்ல. நான் பயணித்த எனது கணவரின் வாகன காப்பீடுதாரர் மீது தான் இழப்பீடு கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் எனது கணவருடன் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். விபத்தை நடந்த போது பார்த்தேனா என்றால் விபத்து நடநத் போது நான் பார்க்கவில்லை வாகனம் மோதி கீழே விழுந்து நான் கோமாவிற்கு சென்றுவிட்டேன். நான் நல்ல முறையில் குணமாகிவிட்டதாக தான் மருத்துவர்கள் என்னை மருத்துவமனையில் இருந்து விடுவித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் தொடர்சிகிச்சையில் இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்வில்லை என்றால் சரியல்ல. நான் தொடர்சிகிச்சையில் இருந்து வருவதாகவும், எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமாகவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் தையல் தொழில் செய்து

வரவில்லை என்றாலும், எனக்கு தனிப்பட்ட வருமாவம் வரவில்லை என்றாலும் சரியல்ல. நான் தையல் தொழில் செய்வதற்கு தனிப்பட்ட படிப்பு படித்திருக்கிறேனா என்றால் படித்திருக்கிறேன். Fashion Technology படித்துள்ளேன். விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவு, அஜாக்கிரதை காரணம் என்றாலும், நான் தான் பின் இருக்கையில் அமர்ந்து ஒழுங்காக வாகனத்தை பிடித்து வரவில்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மிக அதிகம் அது எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய சாட்சியத்தை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.

(ஒம்.சி.சொர்ணகுமார்)
தலைமை குற்றவியல் நடுவர்,
கரூர்.